**திரப்பனை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திரப்பனை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று/தேறிய சொத்துக்கள்/உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரப்பனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கடந்த வருடத்தில் நிர்மாணிக்கப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 153,133,568 பெறுமதியான 04 பாலங்கள், ரூபா 1,344,000 பெறுமதியான நீர் வடிக்கும் கட்டிடமொன்று மற்றும் ரூபா 253,168 பெறுமதியான LDSP செயற்திட்டத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட அச்சுக்கற்கள் பதிக்கப்பட்ட வீதியொன்றின் பெறுமதி ஆகியன மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்த காரணத்தால் மீண்டெழாத செலவினங்களுக்காக அரசின் ஒப்படைப்புப் பெறுமதி மற்றும் மிகை ∴ பற்றாக்கறை இனங்காணப்பட்ட மூலதன மானியங்களின் பெறுமதிகள் ரூபா 15,372,312 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் செலவினங்கள் சான்றுபடுத்தப்பட்டிராத போதிலும், அந்த செயற்திட்டத்தின் காணி மற்றும் கட்டிட சொத்துக்கள் அதிகரிப்பு ரூபா 17,545,953 ஆக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் காணி, கட்டிடங்கள் மற்றும் மூலதன மானியங்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | LDSP செயற்திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தி விற்பனை நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு பணியும் மேற்கொள்ளப்பட்டதாக சான்றுபடுத்தப்படாத போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பெறுமதி கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் ரூபா 17,500,000 இனால் கடன் கொடுத்தோரும், ரூபா 6,324,3030 இனால் கடன் பட்டோரும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிக் போது காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்ட 04 செயற்திட்டங்களின் சான்றுபடுத்தப்பட்ட பணிகளின் பெறுமதிக்கு பதிலாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 6,164,136 இனால் அதிகரித்திருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட ரூபா 20,000 ஆன அச்சுப் பிரதி இயந்திரமொன்று குறிப்பு இலக்கம் 16 இல் அகற்றுதலாக வெளிப்படுத்தப்படாது ஆண்டின் சேர்த்தல்களிலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிற்குரிய குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம், 03 உருப்படிகளின் பெறுமதிகள் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளுக்கிடையே ரூபா 2,712,303 ஆன வேறுபாடொன்ற நிலவியது. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றக்களில் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தினை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 13,771,043 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 8,192,258 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வீதவரி மற்றும் குப்பை வரி வருமானம் ரூபா 564,603 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) **வாடகை**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வருமானம் ரூபா 405,245 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**<br>------------------------------<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானமான ரூபா 1,766,040 இனுள் சரியாக மதிப்பீடு செய்யப்படாத உல்கல்ல ஹோட்டலிலிருந்து பெற வேண்டிய ரூபா 1,700,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளடங்கியிருந்ததுடன், அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான போதிய தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை. | ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செயற்திட்டம் தொடர்பில் மதிப்பாய்வொன்று மேற்கொண்டு பட்டியலிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்த பிரேரிக்கப்பட்ட உட்டிமடுவ குச்சிவாளிக்கம் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு 2018 யூன் 05 ஆந் திகதி சபைக்கு ரூபாா 50,000 பெறப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாது மீளாய்வாண்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அந்த பெறுமதி கடன் பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | முகாமைத்துவம் உரிய முறையில் செயற்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது கணக்காய்வுக் கட்டணமான ரூபா 369,200 தொகையை செலுத்துவதற்காக சபை 2021 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பணம் கிடைத்தவுடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | செலுத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடந்த 05-11 வருடங்களை விஞ்சிய காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 285,874 தொகையான 06 கணக்கு மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உறுதிப்படுத்த சான்றுகள் இல்லாதிருந்தமையால் தீர்ப்பனவு செய்ய முடியாதுள்ளது. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் 02 வருட காலத்தினுள் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி ரூபா 128,050 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்க அனுப்பி வைக்கப்படாது சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்க அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 04 வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் 06 வருடங்களை கடந்தும் செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன், அந்த வாகனங்கள் 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கைத்தவிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 திசெம்பர் 29 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த 33 பொருள் உருப்படிகள் உரிய பணியில் ஈடுபடுத்தப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிலவும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றை ஆரம்பிக்க முடியாதுள்ளது. | பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டின் போது வட மத்திய மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 640,300 பெறுமதியான அரிசி தயாரிப்பு நிலையத்தின் உபகரணங்கள் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சபையின் எதிர்ப்பின் காரணமாக ஏலமிடுவதற்கு முடியாதிருந்தது. | |